

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 20,021 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, அரவிந்த் ரமேஷ், திருமதி வரலட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி, எம்.எம்.பாபு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், நில நிர்வாக ஆணையர் பழனிசாமி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண் தம்புராஜ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி கே.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் எஸ். பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் (08.08.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர், கே.விவேகானந்தன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம், மேலாண்மை இயக்குநர், ஹனிஷ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கி வரும் – 3,80 லட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு

# தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக - ரூ.128.43 கோடி நிதி விடுவிப்பு!

## முதல்வர் உத்தரவு! பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தகவல்!



சென்னை, ஆக. 10 -

ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கி வரும் 3.80 லட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக ரூ.128.43 கோடி நிதி முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி விடுவிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 2023 முதல் ரூ.536.09 கோடி ஊக்கத்தொகையாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கி வரும் 3.80 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.128.43 கோடி ஊக்கத்தொகை வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கடந்த 05.11.2022 முதல் ஆவின் பால் கொள்முதல் விலை பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.32/லிருந்து ரூ.35/ ஆகவும், எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.41/லிருந்து ரூ.44/ ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்களிடையே கறவை மாடு வளர்ப்பை ஊக்குவிக்கவும் பால் உற்பத்தியை பெருக்கும் நோக்கத்திலும், கடந்த 18.12.2023 முதல் சங்கங்களுக்கு பால் வழங்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு லிட்டர் பாலுக்கு ரூ.3/ வீதம் பால் கொள்முதல் ஊக்கத்தொகை வழங்க தமிழ்நாடு அரசால் அரசாணை வெளியிடப்பட்டது.

கடந்த டிசம்பர் 2023 முதல் மார்ச் 2025 வரை தமிழ்நாடு அரசிடமிருந்து ரூ.407.66 கோடி பால் கொள்முதல் ஊக்கத்தொகை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 3.80 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்து தொடர்ந்து கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகளவில் பால் வழங்கி வருகின்றனர். மேலும் தற்போது ஏப்ரல் 2025 முதல் ஜூன் 2025 வரையிலான காலத்திற்கு பால் கொள்முதல் ஊக்கத்தொகையாக ரூ.128.43 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாத்திட தேவையான அனைத்து உதவிகளையும் ஆவின் நிறுவனத்திற்கு தொடர்ந்து வழங்கி வருவதால், கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தி தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டு, ஆவின் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கி மென்மேலும் பொருளாதார மேம்பாடு அடைந்திடவும், கிராமப் பொருளாதாரம் உயர்ந்திடவும் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கிட வேண்டும் என பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

### ஜனநாயகத்தை கசாப்பு செய்த தேர்தல் ஆணையம்!

# புகார் கூறினால் சத்திய பிரமாணம் செய்யச் சொல்லி நிர்பந்திப்பதா?

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஆக. 10 -

வாக்காளர் பட்டியல் குறித்து புகார் கூறினால் சத்தியப் பிரமாணம் செய்யச் சொல்லி நிர்ப்பந்திப்பது தேர்தல் ஆணையம் மிரட்டுவது போன்று உள்ளது. தேர்தல் ஆணையம் தனது செயல்பாடுகளை மறுஆய்வு செய்ய வேண்டும். நடைபெற்ற முறைகேடுகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்று தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அது வருமாறு :-

கடந்த 2024 மக்களவைத் தேர்தல் முதல் பல்வேறு மாநிலத் தேர்தல்களில் பாஜகவுடன் தேர்தல் ஆணையம் கூட்டு வைத்து மிகப் பெரிய அளவில் வாக்காளர் பட்டியலில் மோசடி செய்துள்ளதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் சாதரணமானவை அல்ல. இதுகுறித்த தரவுகளையும் அவர் வெளியிட்டு நாட்டு மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

இந்த விரிவான ஆய்வில், பாஜகவுடன் தேர்தல் ஆணையம் கூட்டு வைத்து ஐந்து விதமாக வாக்குகள் திருடப்பட்டுள்ளதாக அவர் சந்தேகிக்கிறார். 1. போலி வாக்காளர்கள், 2.போலி முகவரி, 3.ஒரே முகவரியில் அதிக வாக்காளர்கள், 4.தவறான புகைப் படங்கள், 5.படிவம் 6 தவறாக பயன்படுத்தப்படுவது என 5வகைகளில் வாக்குகள் திருடப்பட்டுள்ளன என்கிறார்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பதைப் போல், கர்நாடகாவின் பெங்களூரு மத்திய மக்களவைத் தொகுதியில் மட்டும் 1,00,250 வாக்குகள் திருடப்பட்டுள்ளன. இது ஒரே ஒரு தொகுதியில் மட்டும் நடந்த மோசடி என்றால், நாடு முழுவதும் எவ்வளவு மோசடி நடந்திருக்கும்! இதே தொகுதியில் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள 40,009 வாக்காளர்களின் முகவரிகள் போலியானவை.

பல ஆண்டுகளாக நம்பகமான அரசியல் சாசன நிறுவனமாக இருந்த தேர்தல் ஆணையம், மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்க ளின் கட்சி அலுவலகம் போல் மாற்றப்பட்டுவிட்டது. தலைமைத் தேர்தல் ஆணையர், ஏனைய ஆணையர்கள் தேர்வில் இருந்தே இந்த மோசடி தொடங்கி விடுகிறது. பாஜக ஆதரவு அதிகாரிகள் ஆணையர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

குற்றச்சாட்டுகளை ஆதாரத்தோடு அம்பலப்படுத்திய பிறகும் பா.ஜ.க. அதை ஏற்க மறுத்து குற்றச்சாட்டு எழுப்பியவர் மீதே புழுதி வாரித் தூற்றுகிறது. வாக்குகளை யார் திருடுகிறார்கள் என்பது தேர்தல் ஆணையத்திற்கு தெரியும். முன்பு, ஆதாரம் இல்லை, ஆனால் தற்போது ஆதாரம் உள்ளது. அனைத்துத் தரவுகளும் கிடைத்துள்ளன. இந்த வாக்குத் திருட்டு பல தொகுதிகளில் செய் யப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் ஆணையம் இனியும் சாக்குப்போக்கு சொல்லக் கூடாது. எதிர்க்கட்சிகளுக்கு சிசிடிவி காட்சிகள் மற்றும் மின்னணு வாக்காளர் பட்டியலை வழங்க வேண்டும்.

விரைவில் பீகார் மாநிலத்திற்கும் அடுத்தாண்டு தமிழ்நாடு, கேரளம், மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களுக்கும் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகள் மீது உரிய நடவடிக்கை எடுத்தால் தான் வரும் காலத்தில் நடைபெறும் தேர்தல்கள் நியாயமாக நடைபெறுவதை உறுதி செய்வதாக இருக்கும்.

‘அதே போல் புகார் கூறினால் சத்திய பிரமாணம் செய்யச் சொல்லி நிர்ப்பந்திப்பது, மிரட்டுவது போன்று உள்ளது. எனவே தேர்தல் ஆணையம் தனது செயல்பாடுகளை மறுஆய்வு செய்ய வேண்டும். நடைபெற்ற முறைகேடுகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி119(அ) வட்ட கழகத்தில் உள்ள, சி.ஐ.டி காலனி இல்லத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என்.துரை ஏற்பாட்டில், தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை மலர்களால் அலங்கரித்து, ஏழை எளிய பொது மக்களுக்கு, நாடாளுமன்றக் குழு தலைவரும் கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் அனைவருக்கும் புடவை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், குமரி விஜயகுமார், வட்டச் செயலாளர் லைனர்.கே.பிரபு, மற்றும், மாநில, மாவட்ட, பகுதி, நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

### பிரதமரின் நகர்ப்புற வீடுகட்டும் திட்டம்!

# தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசின் பங்களிப்பு அதிகரிக்கப்படுமா?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 10 -

பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புற திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான ஒன்றிய அரசின் பங்களிப்பை அரசு அதிகரிக்குமா? என்று மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்வி வருமாறு:-

பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புற திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான ஒன்றிய அரசின் பங்களிப்பை அதிகரிக்குமாறு தமிழக அரசிடமிருந்து ஒன்றிய அரசு ஏதேனும் கோரிக்கையைப் பெற்றுள்ளதா? அப்படியானால் அதன் விவரங்களும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் யாவை?

தமிழ்நாட்டில் திட்டத்தின் கீழ் மொத்த முதலீட்டான ரூ.50,000 கோடியில் தமிழக அரசு சுமார் ரூ.40,000 கோடியை செலவிட்ட நிலையில், ஒன்றிய அரசு ரூ.10,000 கோடியை மட்டும் வழங்கியுள்ளது என்பது உண்மையா? அப்படியானால்> அதன் விவரங்கள்; மற்றும் மாநில வாரியாக ஒன்றிய அரசின் பங்கின் விவரங்களுடன் அனுமதிக்கப்பட்ட, மற்றும் முடிக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் மனோகர் லால் கட்டார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விருமாறு:-

நாடு முழுவதும் உள்ள தகுதியுள்ள நகர்ப்புற பயனாளிகளுக்கு அடிப்படை குடிமை வசதிகளுடன் கூடிய அனைத்து வானிலை வீடுகளையும் வழங்கும் நோக்கத்துடன், 25.06.2015 முதல் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புற (PMAYU) ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டம் பயனாளி தலைமையிலான கட்டுமானம், கூட்டாண்மையில் மலிவு விலை வீடு, இடத்திலேயே குடிசை மறுவடிவமைப்பு மற்றும் கடன் இணைக்கப்பட்ட மானியத் திட்டம் ஆகிய நான்கு பிரிவுகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தை மறுசீரமைத்து, நாடு முழுவதும் நகர்ப்புறங்களில் செயல்படுத்துவதற்காக 01.09.2024 முதல் ‘அனைவருக்கும் வீடு’ திட்டத்தைத் தொடங்கியுள்ளது. பயனாளிகள் தலைமையிலான கட்டுமானம், கூட்டாண்மையில் மலிவு விலை வீடு, மலிவு விலை வாடகை வீடு மற்றும் வட்டி மானியத் திட்டம் ஆகிய நான்கு பிரிவுகளின் மூலம் 1கோடி கூடுதல் தகுதியுள்ள பயனாளிகளை ஆதரிக்க இது உதவும்.

தொடக்கத்திலிருந்து 14.07.2025 வரை, மொத்தம் 6,70,425 குடியிருப்பு அலகுகள் தமிழ்நாடு மாநிலத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன, அவற்றில் 6,07,051 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் அனுமதிக்கப்பட்ட 6,70,425 குடியிருப்பு அலகுகளில், தமிழ்நாட்டிற்கு ரூ.11,036.47 கோடி மத்திய உதவி அங்கீகரிக்கப்பட்டுள்ளது, அதில் இதுகாறும் மாநில/மத்திய நோடல் ஏஜென்சிகளுக்கு (CNAS) ரூ.10,426.37 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சமர்ப்பித்த விரிவான திட்ட அறிக்கைகளின் (DPRs) படி மாநில உதவி ரூ.12,019.19 கோடியாகும்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### திண்டிவனம் – திருவண்ணாமலை

# அகல ரயில் பாதை திட்டத்தை விரைவுபடுத்துக!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக.10-

திண்டிவனம் - திருவண்ணாமலை அகல ரயில் பாதை திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி தி.மு.க. உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தினார்.

இது தொடர்பாக அவர் விதி எண் 377இன் கீழ் முன்வைத்த கோரிக்கை வருமாறு:-

திண்டிவனம் திருவண்ணாமலை புதிய அகல ரயில் பாதை திட்ட திட்டத்திற்கான மொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டிற்கு எதிராக நிதி குறைவாக விடுவிக்கப்படுகிறது. மொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டான ரூ.42.7 கோடிக்கு எதிராக, மொத்த செலவு ரூ.76.54 லட்சமாக உள்ளது.

திண்டிவனம் திருவண்ணாமலை புதிய அகல ரயில் பாதை திட்டத்தை சரியான நேரத்தில் முடிப்பதற்காக, திட்டப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக, திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் அணுகி, திட்டத்திற்கு பட்ஜெட் ஒதுக்கீட்டின்படி நிதியை விடுவிக்குமாறு ஒன்றிய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வலியுறுத்தினார்.

### புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமையில்

# ஜிப்மர் நிர்வாகத்தைக் கண்டித்து தி.மு.க.வினர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

புதுச்சேரி, ஆக. 10 -

புதுச்சேரி மண்ணின் மைந்தர்களை படிப்பு மற்றும் வேலைவாய்ப்பில் புறக்கணித்து, பிற மாநிலத்தவர்கள் பயன்பெறும் வகையில் ஜிப்மர் நிர்வாகம் புதுச்சேரி மக்களின் நல்வாழ்வு மற்றும் வேலைவாய்ப்பில் அக்கறை காட்டாமல் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் செயல்படுவதை கண்டித்தும், ஜிப்மர் நிர்வாக வேலை வாய்ப்பளிக்கும் தேர்வை ஜிப்மர் நிர்வாகமே நடத்த நடவடிக்கை எடுக்கவும், தற்போது அறிவித்துள்ள செவிலியர் மற்றும் குரூப் பி & சி பணியிடங்களில் புதுச்சேரி மண்ணின் மைந்தர்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வலியுறுத்தியும் புதுச்சேரி மாநில திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் ஜிப்மர் நுழைவு வாயிலில் இன்று காலை நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் தலைமை தாங்கினார். அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி வரவேற்று பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் இலவச மருத்துவம் வழங்காத ஜிப்மர் நிர்வாகத்தை கண்டித்தும், வேலைவாய்ப்புக்கான தேர்வை ஜிப்மரிலேயே நடத்தக் கோரியும் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இதில், துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப. காந்தி, டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், மு. பிரபாகரன், ப. செல்வநாதன், ந. தங்கவேலு, வீ. சண்முகம், கே.பி. இளம்பரிதி, பெ. பழநி, எஸ். எஸ். செந்தில்குமார், நா. கோபாலகிருஷ்ணன், ஜெ. வேலன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், எல். மணிகண்டன், து. சக்திவேல், கோ. தியாகராஜன், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், க. ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், செ.ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், சி. சத்தியவேல், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், வர்த்தகர் அணி சு. ரமணன், மீனவர் அணி ந. கோதண்டபாணி, தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டர் அணி சுமதி, விவசாய தொழிலாளர் அணி ப. தவமுருகன், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ. முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், அயலக அணி அ. ஷாஜகான், அணித் தலைவர்கள் ஆதிதிராவிட நலக்குழு மு. பழனிசாமி, தொமுச பொ. அங்காளன், துணைத் தலைவர்கள் மகளிர் அணி வெ. பிரியதர்ஷினி, மகளிர் தொண்டர் அணி ரா. விஜயலட்சுமி, ஆதிதிராவிட நலக் குழ அ. கதிரவன், மீனவர் அணி ம. குமணன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ஜே.ஆர். ராஜேஷ் (எ) சேவியர் ராஜேஷ், சுற்றுச்சூழல் அணி ஞா. நவீன் (எ) மணிகண்டன், வழக்கறிஞர் அணி பெ தாமோதரன், துணை அமைப்பாளர்கள் டாக்டர் ரோ. நித்திஷ், ம. ரெமிஎட்வின், தே. தாமரைக்கண்ணன், மு. உத்தமன், எரிக்ஸ், ந. கண்ணன், ரமா, ர. புஷ்பலதா, வீ. நல்குணா, ஜெ. தேன்மொழி, அ. காமாட்சி, ஏ. கல்யாணி, ஜோ. கஸ்தூரி, மு. அரசம்மாள், து. அன்பழகன், அ. சக்திவேல், சி. திருநாவுக்கரசு, அ. காளி, க. தெய்வேந்திரன், அய்யனார், சிவசுப்ரமணியன், உத்திராபதி, தமிழ்வாணன், கலிவரதன், சிவதாசன், சுரேஷ், கவுதம்பாஸ்கர் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.